மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட மருத்துவ மனைகளிலே கூட டி.எம்.ஓ. போன்றவர்கள் தலைமைப் பொறுப்பை வகிக்கின்றார்கள். அவர்கள் மருத்துவ மனைப் பொறுப்பையும் நிர்வாகப் பொறுப்பையும் மேற்கொள்கின்ற பொழுது, முழுமையாக, மருத்துவ மனையிலுள்ள நோயாளிகளைக் கவனிப்பது அல்லது, மற்றைய டாக்டர்களை முறைப்படுத்தி பணி வாங்குவது பெரிதும் பாதிக்கப்படுகிறது. எனவே, அதைக் கருத்திலே கொண்டு, குறைந்தபட்சம் எல்லா மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளிலாவது இப்படிப்பட்ட அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆபீசர்களைப் போடுவதற்கு அரசு விரைவாகப் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது 5 இடங்களில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நான் சொன்னேன். சென்னையிலுள்ள ஸ்டான்லி மருத்துவ மனை, அரசு பொது மருத்துவ மனை, இராயப்பேட்டை மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் மருத்துவ மனை, மதுரையிலுள்ள இராஜாஜி மருத்துவ மனை ஆகியவற்றில் இப்பொழுது இருக்கிறார்கள். மீதம் இருக்கிற கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய கல்லூரிகளிலே நியமிக்கலாமா என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. அவற்றிற்கு நியமித்ததற்குப் பிறகு, மாவட்டங்களுக்குத் தேவைப்பட்டால் அரசு பரிசீலிக்கும்.

தஞ்சை மாவட்டத்தில் கருத்தடை செய்துகொண்டவர்கள்.

441—(* வினா எண். 2856) **திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பார்—

(அ) 1984-85 மற்றும் 1985-86-ல் தஞ்சை மாவட்டத்தில் கருத்தடை செய்துகொண்டவர்களில் உடல் நலம் பாதிக்கப்பட்டதாக அரசிடம் உதவி கேட்டு மனுக்கள் எவையேனும் வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாவை?

1987 ஏப்ரல் 22]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மனுக்கள் எதுவும் வரவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாவட்டத் தலைநகரங்களில் குழந்தைகளுக்கு தனி மருத்துவமனை.

442—(*வினா எண் 4685) **திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை, கோவை, திருச்சி, சேலம் போன்ற மாவட்டத் தலைநகரங்களில் குழந்தைகளுக்குத் தனியாக மருத்துவமனை (Children Hospital) நிறுவ அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரங்களில் குழந்தைகளுக்குத் தனியாக மருத்துவமனை நிறுவ அரசிடம் திட்டம் ஏதும் இல்லையென்று சொன்னார்கள். ஆனால், அரசு மருத்துவ மனைகளில் குழந்தைகளுக்கு என்று ஏதேனும் தனியாக வார்டுகள் ஒதுக்கப்பட்டுள்ளனவா? எத்தனை படுக்கைகள், என்னென்ன வசதிகளோடு ஒதுக்கப்பட்டுள்ளன என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி, சேலம் தலைமை மருத்துவ மனைகளில் குழந்தை சிகிச்சைப் பிரிவு எல்லா வசதிகளோடும் இயங்கி வருகிறது. மற்றும் கோவையிலே, குழந்தைகள் நல மருத்துவ மனைக்காக சிறை வளாகத்திலே இடம் ஒதுக்கும்படியாகக் கேட்டோம். ஆனால், அங்கே இடம் இல்லையென்று சொல்லி விட்டார்கள். கலைக் கல்லூரி வளாகத்திலே இடம் பெறுவதென தீர்மானிக்கப்பட்டது. அது சம்பந்தமாக மருத்துவக் கல்வி இயக்குநருக்கும், கோவை மருத்துவக் கல்லூரி முதல்வருக்கும் இடையே கடிதப் போக்குவரத்து நடந்துள்ளது. மதுரை இராஜாஜி மருத்துவ மனையிலும் கோவை மருத்துவக்